கூட்டம் எண்.004/2022

பேர்ணாம்பட்டு நகராட்சி
வேலூர் மாவட்டம்
நாள்.28.06.2022.

## சாதாரணக் கூட்டம்

பேர்ணாம்பட்டு நகர் மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2022ம் ஆண்டு ஜீன் மாதம் 30ம் தேதி வியாழக்கிழமை மாலை 03.30 மணியளவில் பேர்ணாம்பட்டு நகர் மன்றக் கூட்டத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் பின்வரும் பொருள்கள் குறித்து தீர்மானிக்கப்பட உள்ளதால் நகர்மனற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
வேலூர் மாவட்டம்

பெறுநர்
நகரமன்ற துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.

-----

பொருள் எண்.1

பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2022 மே 2022 மற்றும் ஜீன் 2022ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.
ந.க.எண்.500/2021/சி1
தீர்மானம் எண். 43
அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.2

பேர்ணாம்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2022 மே 2022 மற்றும் ஜீன் 2022ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.
ந.க.எண்.500/2021/சி1
தீர்மானம் எண். 44
அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.3

நகர்மன்ற தலைவர் திருமதி.பிரேமா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

12வது வார்டு பாண்டியன் வீதி–3ல் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு C 1854 சொந்தமான சர்வே எண்.412/3 புதிய எண். 412/284 1970ம் ஆண்டு கட்டப்பட்ட பாழடைந்த கட்டிடம் ஆகும். இந்த கட்டிடத்தில் பல தகாத செயல்கள் நடந்து வருகிறது. இந்த இடத்தை பேர்ணாம்பட்டு நகராட்சிக்கு மாற்றி தருமாறு ஆணையாளர், துணை ஆணையர், பால் உற்பத்தி சங்கத்திற்கு நகர்மன்ற தீர்மானம் மூலம் கடிதம் அனுப்பவும்.

மேற்கண்ட இடத்தில் நகராட்சி மூலம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்து பயன்படுத்தலாம் என அளித்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 45

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.4

<u>நகர்மன்ற தலைவர் திருமதி. வெ.பிரேமா அவர்கள் மற்றும் நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஆலியார் ஜீபேர் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

பேர்ணாம்பட்டு நகரில் இயங்கி வந்த அரசு கோஷா ஆஸ்பத்திரி தற்போது இடிக்கப்பட்டு புதியதாக கட்டப்பட்டு வரும் கட்டடம் கொடைவள்ளல் மரீத் ஹாஜி முஹம்மத் இஸ்மாயில் சாஹெப் அவர்கள் பொதுமக்களுக்காக அரசுக்கு தானமாக வழங்கப்பட்டது. ஆகவே, புதியதாக கட்டப்பட்டு வரும் மருத்துவமணைக்கு மரீத் ஹாஜி முஹம்மத் இஸ்மாயில் சாஹெப் அரசு மருத்துவமனை என பெயர் வைக்க அரசுக்கு பரிந்துரை கடிதம் அனுப்ப கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 46

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.5

<u>1வது வார்டு உறுப்பினர் திரு.வை.அதிகுர் ரஹ்மான் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 1வது வார்டு தரைக்காடு குப்பைமேடு பகுதிக்கு 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை அமைத்து தருமாறு கோருகிறார்.
2. 1வது வார்டு தரைக்காடு பகுதியில் உள்ள கேரளா மாமு கடைக்கு பக்கத்தில் உள்ள கழிவுநீர் கால்வாய் கல்வெட்டு முற்றிலுமாக பழுதடைந்துள்ளதால் புதியதாக அமைத்து தருமாறு கோருகிறார்.
3. 1வது வார்டு தரைக்காடு பகுதியில் உள்ள பிலால் மஸ்ஜித் பக்கத்தில் உள்ள கழிவுநீர் கால்வாய் கல்வெட்டு முற்றிலுமாக பழுதடைந்துள்ளதை அகற்றி புதிய கல்வெட்டு அமைத்து தருமாறு கோருகிறார்.
4. 1வது வார்டுதரைக்காடு பகுதியில் பிலால் மஸ்ஜித்தில் 15 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்ட கழிவுநீர் கால்வாய் பழுதடைந்துள்ளதால் அவ்வழியே செல்லும் மாணவர்களும் பொதுமக்களும் மிகவும் சிரமப்படுவதால் புதியதாக அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 47

1, 2, 3, 4 பொறியாளர் பார்வையிட்டு அறிக்கை வைக்கவும்.

பொருள் எண்.6

<u>2வது வார்டு உறுப்பினர் திருமதி.ஜானகி வில்லியம் பீட்டர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 2வது வார்டு திவான்மஜித் தெருவில் 2 மின்கம்பங்கள் புதியதாக அமைத்து தரவும், புதுஷாப் லைன் 3 மின்கம்பங்கள் அமைக்கவும், ஜெ.ஜெ.நகரில் 3 மின் கம்பங்கள் அமைத்து மின்விளக்குகள் பொருத்தி தருமாறு கோருகிறார்.
2. திவான்மஜித் தெருவில் இரண்டு மின்விளக்குகள் அமைத்து தருமாறு கோருகிறார்.
3. புதுஷாப் லைன் அருகே உயர்மின்கோபுர விளக்கு அமைத்து தருமாறு கோருகிறார்.
4. ஜெ.ஜெ.நகர் கோயில் அருகே உயர்மின்கோபுர விளக்கு அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 48

1–எலக்ட்ரிஷியன் அறிவிக்கை வைக்கவும்.

2, 3, 4 வளர்ச்சி நிவாரண பணிகளில் பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கப்படுகிறது.

பொருள் எண்.7

5வது வார்டு உறுப்பினர் திரு. சி.அப்துல் ஹமீத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. 5வது வார்டில் புது வீதி–1, 2. நூர் அகமத் வீதி–1,2 மற்றும் பஜார் வீதியில் சிமெண்ட் சாலை மற்றும் கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.
2. வார்டு எண்–5ல் உள்ள அனைத்து தெருக்களிலும் பழைய பி.வி.சி. பைப்லைன்களை அகற்றி புதிய பைப்லைன்கள் பொருத்தி தருமாறு கோருகிறார்.
3. குல்ஜார் வீதி, புது வீதி, பஜார் வீதி மற்றும் சுடுகாடு அருகில் உள்ள காட்டாறு உள்ளதால் அதிக அளவில் முட்புதர்கள் உள்ளது. அப்பகுதியில் உள்ள விஷ ஜந்துக்கள் அதிக அளவில் உள்ளதால் அப்பகுதிக்கு உயர்மின் கோபுர விளக்கு அமைத்து தருமாறு கோருகிறார்.
4. பேர்ணாம்பட்டு நகர பகுதியில் இரவு நேரங்களில் டிராக்டர், மாட்டு வண்டி மூலம் மணல் லோடு எடுத்து வருவதால் தெருக்களில் உள்ள கால்வாய்கள் உடைந்துள்ளது. மேலும் இரவு நேரங்களில் மணல் வாகனங்கள் செல்லவதற்கு ஏதுவாக அங்கு உள்ள மின் விளக்குகளை அனைத்து விடுகிறார்கள். இதனால் வெளியூரில் இருந்து வரும் பயனிகள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மேலும் திருட்டு சம்பங்கள் நடைப்பெற வாய்ப்பு அதிக வாய்ப்பு உள்ளது. எனவே, இதனை தடுக்க இரவு நேரங்களில் ரோந்து செல்ல பேர்ணாம்பட்டு காவல் நிலையத்திற்கு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு கோருகிறார்.
5. பேர்ணாம்பட்டு பகுதியில் இரவு நேரங்களில் திருட்டு, மணல் கொள்ளை, ரேஷன் அரிசி கடத்தல், பட்டப்பகலில் காட்டன் சுதாட்டம், லாட்டரி, கஞ்சா போன்ற சமூக விரோத செயல்கள் நடப்பதால் இளைஞர்கள் மாணவ செல்வங்கள் வருங்கால சந்ததியினர் காட்டன், லாட்டரி, கஞ்சா போன்ற செயலுக்கு அடிமையாகி பாதிக்கப்படுகின்றனர். அதனை தடுக்கும் வகையில் பேர்ணாம்பட்டு நெடுஞ்சாலையில் உள்ள பழுதடைந்துள்ள கேமராக்களை சரிசெய்யவும் மற்றும் வி.கோட்டா சாலை, தீரமதிஷாப் வீதி, பஜார் வீதி, பேர்ணாம்பட்டு நகரத்திற்கு உள்ளே நுழைவாயில்களில் CCTV கேமராக்கள் அமைத்து தர தீர்மானம் நிறைவேற்றி உயர்திரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்து நகரத்திற்குள் நடக்கும் சட்ட விரோதமான செயல்களை காவல்நிலையம் மூலம் தடுத்து, கண்காணிப்பினை தீவிரப்படுத்தவும், மேலும் காவல்நிலையம் மூலமாக கூடுதலாக கேமராக்களை அதிகப்படுத்தி தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 49

1, 2 வளர்ச்சி நிவாரண நிதியில் பணிகள் வரிசைப்படி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கப்படுகிறது.

3, 4 தீர்மானத்தின்படி அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்து வையொழுத்திட்டால் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.8

11வது வார்டு உறுப்பினர் திரு.டி.அப்துல் ஜமில் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

வருகின்ற 10.07.2022ம் தேதி பக்ரீத் பண்டிகை வருவதால் அன்று முதல் மூன்று நாட்கள் ஆடு மற்றும் மாடு வதைப்பதால் அதிலிருந்து வரும் கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தவும் பிளிச்சீங் பவுடர், சுண்ணாம்பு தெளிப்பது, குடிநீர், மின்விளக்குகள் போன்ற அத்தியாவசிய பணிகளை செய்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 50

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.9

<u>13வது வார்டு உறுப்பினர் திரு.சி.அஹ்மத் பாஷா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 13வது வார்டு மரித் மார்க்கெட் வீதி, பஜார் வீதி கீழ் பகுதி கடைசி தெரு வரை சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கோருகிறார்.
2. 13வது வார்டு எம்.ஆர் வீதி (ம) சின்ன மஜித் வீதி பழுதடைந்துள்ள கல்வெட்டை புதிதாக அமைத்து தருமாறு கோருகிறார்.
3. 13வது வார்டு இனாம்தார் வீதி, சின்னமஜித் வீதியில் உள்ள போர்வெல் பைப்லைன் புதியதாக 1000 அடிக்கு பைப்புகள் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 51

1, 2, 3 வளர்ச்சி நிவாரண நிதியில் பணிகள் மேற்கொள்ளவும்.

பொருள் எண்.10

<u>19வது வார்டு உறுப்பினர் திரு.ஆர்.கோவிந்தராஜ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

19வது வார்டில் உள்ள பூந்தோட்ட வீதி, ஆயக்கார வீதி, முருகர் கோயில் வீதி கழிவுநீர் கால்வாய்கள் பழுதடைந்தும் மற்றும் சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளதால் பொதுமக்கள் செல்ல மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே போர்க்கால அடிப்படையில் பழுதடைந்துள்ள கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் சாலைகளை சரி செய்து தரும்படி கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 52

பொறியாளர் அறிவிக்கை வைக்கவும்.

பொருள் எண்.11

<u>20வது வார்டு உறுப்பினர் திருமதி.இந்திராகாந்தி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

20வது வார்டு பாகருசேன் வீதி–4ல் சுரேஷ் (காஸ்கிரஸ்) வீடு அருகில் மற்றும் பழைய ஆம்பூர் ரோடு (ராமு போட்டோ ஸ்டுடியோ எதிரில்) உள்ள ஆழ்துளை கிணறு பழுதடைந்துள்ளதை சரி செய்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 53

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.12

<u>21வது வார்டு உறுப்பினர் திருமதி.நஜீஹா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

21வது வார்டு ஷேக்மீரான் வீதியின் பின்புறம் மற்றும் 19வது வார்டு சேஷாத்திரி வீதி பின்புறம் உள்ள கால்வாய் 30 வருடங்களாக தூர் வாரி புதியதாக கால்வாய் அமைத்து தருமாறு கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2) வார்டு–19 சேஷாத்திரி வீதி, வார்டு 21ல் ஷேக்மீரான் வீதி ஆகிய தெருக்களின் பின்புறம் உள்ள கழிவுநீர் கால்வாய் சுமார் 40 ஆண்டுகளாக பழுதடைந்துள்ளது. இந்த கழிவுநீர் கால்வாய் ஒரு பகுதி ஓங்குப்பம் ரோட்டின் ஒரு பகுதியிலும், மற்றொரு பகுதி சுடுகாடு அருகே உள்ள மலட்டாறு வழியாகவும் செல்கிறது. எனவே, போர்க்கால அடிப்படையில் இந்த கழிவுநீர் கால்வாய் தூர்வார செய்யுமாறு கோரியுள்ளதின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 54

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.13

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.276/2020/அ2, நாள்.08.12.2021 மற்றும் 30.03.2022–ன்படி, இந்நகராட்சிக்கு 2021–2022ம் ஆண்டிற்கான பங்களிப்புத் தொகை ரூ.30,000/–ம்

செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டதற்கிணங்க 2021–2022ம் ஆண்டு பங்களிப்புத் தொகை ரூ.30,000/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) அனுமதிக்கலாம்.
2) ரூ.30,000/– (முப்பதாயிரம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 235/2019/சி1

தீர்மானம் எண். 55

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.14

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.24410/2019/எச்1, நாள்.02.02.2021ம் தேதிய கடிதம் மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.5056/2020/அ1, நாள்.19.03.2021ம் தேதிய கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் எ பிளாக் 5–வது மாடியில் உள்ள கூட்ட அரங்கு தற்போது அதிநவீனமயமாக மாற்றப்பட உள்ளதால், அனைத்து துறை அலுவலகங்களும் மாதம் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பதவி பெயரில் பராமரிக்கப்படும் வங்கி கணக்கில் கணக்கு எண்.11057021376 பாரத மாநில வங்கி, சத்துவாச்சாரி கிளையில் இ.சி.எஸ் முறையில் செலுத்த தெரிவித்துள்ளவாறு ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை 12 மாதங்களுக்கு 2022–2023ம் நிதியாண்டிற்கு 12 மாதங்களுக்கு மாதம் ரூ.500/– வீதம் மொத்தம் ரூ.6,000/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) ரூ.6,000/–த்தில் பிரதி மாதம் ரூ.500/– வீதம் மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர்–9 அவர்களுக்கு செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
2) ரூ.6,000/–த்தினை வருவாய் நிதியிலிருந்து செலுத்தம் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.497/2022/சி1

தீர்மானம் எண். 56

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.15

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தமிழ்நாடு சட்டசபை அறிவிப்பு 2022–2023ன்படி இந்நகராட்சியில் புதியதாக அமைய உள்ள 1) புதிய பேருந்து நிலையம் (சாத்கர்) 2) நவீன எரிவாயு தகனமேடை 3) கசடு கழிவு மேலாண்மை ஆகிய மூன்று பணிகள் நடைபெறும் இடங்களில் உரிய மண் பரிசோதனை மேற்கொள்ள அரசு பொறியியல் கல்லூரி, தருமபுரி என்பவருக்கு பணி உத்தரவு வழங்குவதற்கம் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ.85,000/–க்கம் இந்நகராட்சியின் 2022–2023ஆம் நிதியாண்டின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்குவதற்கும், செலவுத் தொகைக்கும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.406/2022/இ1

தீர்மானம் எண். 57

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.16

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022-2023ன்படி இந்நகராட்சியின் புதியதாக அமைய உள்ள கசடு கழிவு மேலாண்மை திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு தொகை ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. உரிய நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 435/2022/இ1

தீர்மானம் எண். 58

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.17

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022-2023ன்படி இந்நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு மதிப்பீடு தொகை ரூ.5.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு உரிய நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.407/2022/இ1

தீர்மானம் எண். 59

ஒத்தி வைக்கப்படுகிறது

பொருள் எண்.18

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022-2023ன்படி இந்நகராட்சிக்கு புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைப்பதற்கு திட்ட மதிப்பீடு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யப்பட்டுள்ளது. உரிய நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 436/2022/இ1

தீர்மானம் எண். 60

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.19

இந்நகராட்சியில் 01.08.2018 முதல் 31.08.2019 வரையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த தொழிலாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட EPF தொகையினை காலதாமதமாக செலுத்தியதற்கு அபராத கட்டம் ரூ.83,203/- மற்றும் அதற்கான வட்டித் தொகை ரூ.1,33,534/- செலுத்தக் கோரி ஆணையாளர், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகம், வேலூர் அவர்களின் Demand Notice of TB/VLR/0092222/PDC/14B/ Date : 29.09.2021 அன்று கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து இவ்வலுவலக ந.க.எண்.80/2018/அ2 நாள்.12.10.2021ல் மொத்த தொகையினையும் தள்ளுபடி செய்யக்கோரி கடிதம் அனுப்பப்பட்டது. அதன்பேரில் ஆணையாளர், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகம், வேலூர் அவர்களின் 10.11.2021ம் தேதிய கடிதத்தில்

தெரிவித்துள்ளபடி, தொகை ரூ.50,331/-யினை தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகம், வேலூர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ரூ.50,331/-ஐ வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.080/2018/அ2

தீர்மானம் எண். 61

அங்கீகரிக்கப்படுகிறது

பொருள் எண்.20

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.பேமே1.4972/2021, நாள்.15.09.2021-ல், வேலூர் மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணியில் ஈடுபடும் செவிலியர்கள் எண்ணிக்கை போதிய அளவில் இல்லாத காரணத்தால் குறைந்த அளவு முகாம்களை மட்டுமே நடத்த முடிகிறது. கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம்களின் எண்ணிக்கையினை அதிகரித்து தினசரி அதிக அளவில் கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கு ஏதுவாக பேர்ணாம்பட்டு நகராட்சியில் 15 செவிலியர்களை தற்காலிகமாக நியமனம் செய்து, பொதுமக்கள் தடுப்பூசி செலுத்தும் பணியினை வேகப்படுத்துமாறும், தற்காலிகமாக நியமனம் செய்யும் செவிலியர்களுக்கு உண்டான ஊதியத்தினை உள்ளாட்சி அமைப்பினரே வழங்கிடவும் உத்திரவிடப்பட்டுள்ளதற்கிணங்க, செவிலியர்களுக்கான தோராயத் ஊதியத்தொகை ரூ.1.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகரமன்ற தீர்மானம் எண்.117, நாள்.30.09.2021ல் அனுமதிக்கப்பட்டது.

மேலும், துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1557/ஆ2/2019, நாள்.15.03.2022-ல், 6 மாத காலம் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணியிலிருந்து 11 செவிலியர்களுக்கு ஊதியத் தொகை ரூ.396300/-ஐ அவர்களின் வங்கி கணக்கில் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, செவிலியர்களுக்கு ஊதியம் வழங்க கூடுதல் தொகை ரூ.3.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மொத்தம் வழங்க வேண்டிய தொகை ரூ.3,96,300/-ல் ரூ.1,00,000/-ம் போக மீதமுள்ள தொகை ரூ.2,96,300/-ஐ பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் ஒப்புதல் எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.114/2020/எச்1

தீர்மானம் எண். 62

அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.21

பேர்ணாம்பட்டு நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள BOLERO JEEP வண்டி எண். TN 23 AU 4626 என்னுள்ள வாகனத்திற்கு பழுதுகள் சரி செய்து சர்வீஸ் செய்ய அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி வழங்கியதன் பேரில் JAIN CARS & AUTO SALES PVT LTD என்ற நிறுவனத்தில் வண்டி ஒப்படைத்து விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளி தொகை

ரூ.59325/–க்கு பணிகள் மேற்கொள்ளவும் செலவின தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டதற்கும் செலவின தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.757/2021/இ1

தீர்மானம் எண். 63

அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.22

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தேவையான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை (Out sourcing) மூலம் பணியமர்த்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.30813/2018/ஜெ3, நாள்.11.12.2018ன்படி, அனுமதி பெறப்பட்டது. பணியாளர்களை பணியமர்த்த ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று 123 எண்ணிக்கை கொண்ட பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்களின் செயல்முறை உத்திரவில் தெரிவித்துள்ள தினக்கூலி அடிப்படையில் 01.04.2019 முதல் 31.03.2022 வரை 3 ஆண்டுகளுக்கு L.D.Manpowe Solution Vellore என்ற நிறுவனத்திடம் பணியாளர்களை பெற்று குப்பைகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தக் காலம் முடிவடைந்து விட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.21787/21/இஎ2, நாள்.02.10.2021ன்படியும், நகர்மன்ற தீர்மானம் எண்.134, நாள்.18.112021ன் படியும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மட்கும்/ மட்காத குப்பைகளை அகற்ற பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை (Out sourcing) மூலம் பணியமர்த்திக் கொள்ள நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

L.D.Manpowe Solution Vellore என்ற நிறுவனத்திடம் பணியாளர்களை பெற்று குப்பைகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தக் காலம் முடிவடைந்து விட்டதால், மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்களால் தினக்கூலி அடிப்படையில் கூலி வழங்கும் பட்டியலின்படி, பழைய ஒப்பந்ததாரருக்கு 01.04.2022 முதல் 30.06.2022 வரை வெளிக்கொணர்வு முகமை (Out sourcing) மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மட்கும்/ மட்காத குப்பைகளை அகற்ற பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை (Out sourcing) மூலம் பணியமர்த்திக் கொள்ள மன்ற அனுமதிக்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 01.04.2022 முதல் 30.06.2022 வரை வெளிக்கொணர்வு முகமை (Out sourcing) மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மட்கும்/ மட்காத குப்பைகளை அகற்ற ஆகும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 114/2022/எச்1

தீர்மானம் எண். 64

01.04.2022 முதல் 30.09.2022 வரை அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.23

இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளும் பணியாளர்கள் மொத்தம் 43 எண்ணிக்கை தினக்கூலி பணியாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.5227/இ2, நாள்.07.06.2021ன்படி மஸ்தூர் பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.304/– என தினக்கூலி நிர்ணயம் செய்யப்பட்டதின்படி ஜனவரி–2022, பிப்ரவரி–2022 மற்றும் மார்ச்–2022 ஆகிய 3 மாதங்களுக்கு தோராய செலவுத் தொகை ரூ.12,00,000/– (பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.8, நாள்.24.01.2022ன்படி அனுமதி பெறப்பட்டது.

01.04.2022ம் தேதி முதல் 30.09.2022ம் தேதி வரை 6 மாத காலத்திற்கு ஆகும் செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 6 மாத காலத்திற்கு ஆகும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.668/2022/எச்1

தீர்மானம் எண். 65

01.04.2022 முதல் 30.06.2022 வரை மட்டும் பணியாளர் பணி வாங்கவும் அதற்கான சம்பளம் தொகை வழங்கவும் அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.24

இந்நகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் அம்மா உணவகம் செயல்பட பிரதி மாதத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள், காய்கறிகள், அரிசி, எரிவாயு உருளை, அம்மா உணவகத்தை நிர்வகிக்கும் மகளீர் சுய உதவிக்குழுவிற்கான மாத ஊதியம் மற்றும் இதர செலவினங்கள் ஆகியவற்றிற்கு 2022–23ஆம் நிதியாண்டிற்கு தேவையான செலவினத்தினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.321/2022/எச்1

தீர்மானம் எண். 66

6 பணியாளர்கள் பணியில் அமர்த்தி கண்கானிப்பு குழு அமைத்து ஆகும் செலவினை அனுமதிக்கலாம்.

பொருள் எண்.25

இந்நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பி வாகனத்தின் பேட்டடரி பழுதடைந்துள்ளதால் புதியதாக 12V பேட்டரி வாங்குவதற்கு அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரி 25.05.2022 அன்று கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | Vellore Battery centre, Vellore | Vellore Battery care, Vellore | The auto Diesel Service, Vellore |
|---|---|---|---|---|
| 1, | இந்நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பி வாகனத்தின் பேட்டடரி பழுதடைந்துள்ளதால் புதியதாக 12V பேட்டரி வாங்குவது | ரூ.13,500/– | ரூ.13,650/– | ரூ.13,800/– |

வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள வேலூர் பேட்டரி சென்டர், வேலூர் என்பவருக்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.710/2022/இ1

தீர்மானம் எண். 67

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.26

இந்நகராட்சியின் 2020-21ம் ஆண்டுக்கான வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி ஆகிய இரண்டு நிதிகளின் கணக்குகளை UTIS இணைய தளத்தில் தயார் செய்து தணிக்கை அலுவலர்களால் தணிக்கை முடிக்கப்பட்டு வேலூர் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகம், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் மற்றும் வேலூர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் போன்ற அலுவலகங்களில் அறிக்கை சமர்ப்பித்தமைக்குண்டான தொகை ரூ.45,000/- (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) திரு.ஜெ.கிருஷ்ணமூர்த்தி, ஜெ.கே.கன்சல்டென்ட் (அக்கவுண்ட்ஸ்) ஊத்தங்கரை என்பவருக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ரூ.45000/-த்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.765/2022/சி1

தீர்மானம் எண். 68

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.27

இந்நகராட்சியின் அலுவலகத்தில் உள்ள ஆணையாளர் அறை, பொறியாளர் அறை, மேலாளர் அறை, கணினி அறை மற்றும் வசூல் மையம் போன்ற இடங்களில் உள்ள மின்கம்பி இணைய தள வசதியுடன் கூடிய தொலைபேசி இணைப்புகள் மிகவும் மோசமாக உள்ளதால் அலுவலக பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. ஆகையால், அலுவலக தொலைபேசி இணைப்புகளை பைப்பர் கேபிள் (FTTH Connection) இணைப்புகளாக மாற்றம் செய்யவேண்டியுள்ளதால் அதற்கு தேவையான மென்பொருட்கள் வாங்கவும் மற்றும் இணைப்பு கட்டணங்களை செலுத்தவும் ஆகும் தோயார செலவினம் ரூ.50,000/-த்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ரூ.50000/-த்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.765/2022/அ1

தீர்மானம் எண். 69

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.28

இந்நகராட்சியின் அலுவலகத்தில் உள்ள UPS இயந்திரம் பழுதடைந்துள்ளதால், மின்இணைப்பு துண்டிப்பு செய்யப்படும் பொழுது அலுவலக கணினிகள் உடனே அனைந்து விடுவதால் (System Off) கணினிகள் பழுதடைந்துவிடுகிறது. மேலும், கணினியின் மூலம் பணிகளை மேற்கொள்ள மிகவும் காலதாமதம் ஏற்படுவதால் பழுதடைந்துள்ள UPS இயந்திரத்தினை சரிசெய்ய ஆகும் தோயார செலவினம் ரூ.3,00,000/-த்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) ரூ.3,00,000/-த்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.767/2022/இ1

**தீர்மானம் எண். 70**

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.29

இந்நகராட்சியின் 2022-23ம் ஆண்டிற்கு செய்தித்தாள் விளம்பரம் மற்றும் திட்டப்பணிகளை விளம்பரம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகளை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.543/2015/அ1

**தீர்மானம் எண். 71**

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.30

இந்நகராட்சியின் 2022-23ம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் வழக்குகளுக்கான வழக்கறிஞர் கட்டணம் செலுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ரூ.1.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகளை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.150/2017/அ1

**தீர்மானம் எண். 72**

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.31

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசித்து வரும் ஆதி-திராவிடர் பழங்குடியினர் வகுப்பை சார்ந்தவர்களுக்கு அரசு வழங்கும் ஈமச்சடங்கு மான்ய உதவித் தொகை வழங்க ஆகும் தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஈமச்சடங்கு மான்ய உதவித் தொகை ரூ.1.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.886/2022/எச்1

**தீர்மானம் எண். 73**

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.32

பேர்ணாம்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2021-22-ன் கீழ் மேற்கொள்ளபடவுள்ள கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு

27.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்த்தாரர்களின் பெயர் | மதிப்பீட் டை விட குறைவு | மதிப்பீட் டை விட அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 11 ரகமதாபாத் 1-ல் மழைநீர்வடிகால்வாய் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 9.00 | கே எஸ் வி கன்ஸ்ட்ரக்ஷன் | 1.64% | - |
| | | | எஸ். கார்த்திகேயன் | - | 0.34% |
| 2 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14 தோப்பு வீதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 3.00 | கே சுந்தரம் **ஒப்பந்ததாரர்** | 0.70% | - |
| | | | எஸ் நரசிம்மன் **ஒப்பந்ததாரர்** | - | 1.05% |
| 3 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15 அஜிஜியா வீதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 9.00 | T சுதாகர் **ஒப்பந்ததாரர்** | 0.72% | - |
| | | | எஸ் அமரேந்திரன் **ஒப்பந்ததாரர்** | - | 1.03% |
| 4 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14 தோப்பு வீதி 2-ல் மழைநீர் வடிகால் உடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 9.00 | கே சுந்தரம் **ஒப்பந்ததாரர்** | 0.68% | - |
| | | | எஸ் நரசிம்மன் **ஒப்பந்ததாரர்** | - | 0.41% |

மேற்படி பணிக்கு வர பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை பணிஉத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்,

**ந.க எண்** : 168/2022/இ1.

தீர்மானம் எண். 74

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.33

பேர்ணாம்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு திட்டம்-2021-22-ன் கீழ் மேற்கொள்ளபடவுள்ள கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 13.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்த்தாரர்களின் பெயர் | மதிப்பீட் டை விட குறைவு | மதிப்பீட் டை விட அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | பேர்ணாபட்டு நகராட்சிக்கு சொந்தமான குல்ஜார் வீதி மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் வி.கோட்டா சாலையில் அமைந்துள்ள நீரேற்றும் நிலையத்தில் புதியதாக திரவ குளோரின் பிளான்ட் அமைக்கும் பணி | 10.00 | ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் | 0.41% | - |
| | | | ஸ்ரீ ராஜகணபதி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | - | 1.26% |
| 2 | பேர்ணாம்பட்டு நகராட்சி பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் பொருத்தப்பட்டுள்ள பிவிசி(PVC) வால்வுகள் மற்றும் பழுதடைந்துள்ள பழைய சூலிஸ் வால்வுகளை புதிதாக மாற்றும் பணி | 9.00 | S. கார்த்திகேயன் **ஒப்பந்ததாரர்** | 0.47% | - |
| | | | S. கதிரவன் **ஒப்பந்ததாரர்** | - | 0.31% |

மேற்படி பணிக்கு வர பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை பணிஉத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க எண்** : 842/2021/இ1.

தீர்மானம் எண். 75

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.34

பேர்ணாம்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு திட்டம்–**2021–22–ன்** கீழ் மேற்கொள்ளபடவுள்ள கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு **22.04.2022** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ. எ ண் | வேலையின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தி ல்) | ஒப்பந்த்தாரர் களின் பெயர் | மதிப்பீட் டை விட குறைவு | மதிப்பீட் டை விட அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | நகர்ப்பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் 2 HP சிறு மின் விசை பம்புகள் மாற்றும் பணி | 15.00 | S. கார்த்திகேயன் **ஒப்பந்ததாரர்** | 0.74% | – |
| | | | S. கதிரவன் **ஒப்பந்ததாரர்** | – | 0.85% |
| 2 | நகர்ப்பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் 10 HP மின் விசை பம்புகள் மாற்றும் பணி | 13.00 | S. கார்த்திகேயன் **ஒப்பந்ததாரர்** | 0.80% | – |
| | | | S. கதிரவன் **ஒப்பந்ததாரர்** | – | 0.50% |
| 3 | அருந்ததியர் காலனி நுண்ணுயிர் உர கிடங்கில் | 9.00 | T சுதாகர் **ஒப்பந்ததாரர்** | 0.36% | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கூடுதலாக செட் அமைக்கும் பணி | | எஸ் அமரேந்திரன் **ஒப்பந்ததாரர்** | – | 0.32% |

மேற்படி பணிக்கு வர பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை பணிஉத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்,

**ந.க எண் : 842/2021/இ1.**

தீர்மானம் எண். 76

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.35

பேர்ணாம்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு திட்டம்–2021–22–ன் கீழ் மேற்கொள்ளபடவுள்ள கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 31.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| **வ. எண்** | **வேலையின் விவரம்** | **மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்)** | **ஒப்பந்த்தாரர் களின் பெயர்** | **மதிப்பீட் டை விட குறைவு** | **மதிப்பீட் டை விட அதிகம்** |
|---|---|---|---|---|---|
| 1 | பெய்லிங் எந்திரம் சப்ளை செய்யும் பணி | 3.60 | Perfect Auto Engineering works | 0.41% | – |
| | | | S. கார்த்திகேயன் **ஒப்பந்ததாரர்** | – | 1.26% |
| 2 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பைப்புகள் அமைக்கும் பணி. | 14.40 | S. வசந்தகுமார் **ஒப்பந்ததாரர்** | 0.75% | – |
| | | | R. சுரேஷ்மணி **ஒப்பந்ததாரர்** | – | 0.80% |

மேற்படி பணிக்கு வர பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை பணிஉத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்,

**ந.க எண்** : 842/2021/இ1.

தீர்மானம் எண். 77

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.36

பேர்ணாம்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் நிதி 2022–23–ன் கீழ் மேற்கொள்ளபடவுள்ள பணிகளுக்கு 13.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| **வ. எண்** | **வேலையின் விவரம்** | **மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்)** | **ஒப்பந்த்தாரர் களின் பெயர்** | **மதிப்பீட் டை விட குறைவு** | **மதிப்பீட் டை விட அதிகம்** |
|---|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் இயங்கி வரும் பவர் பம்பு (ம) சிறு மி.ன் | 9.90 | S. கார்த்திகேயன் **ஒப்பந்ததாரர்** | 0.73% | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணி. | | S. கதிரவன் **ஒப்பந்ததாரர்** | – | 0.65% |

மேற்படி பணிக்கு வர பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள திரு S. கார்த்திகேயன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணிஉத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்,

**ந.க எண் :** 273/2021/இ1.

தீர்மானம் எண். 78

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.37

இந்நகராட்சியில் கலைஞர் நகரப்புற மேம்பாட்டு திட்டம்–2022–23–ன் கீழ் நவீன எரிவாயு தகன மேடை அமைத்திட அரசாணை (நிலை) எண்: 88–நநி(ம)குவ (நநி) துறை நாள்: 17.06.2022–ன்படி ரூ. 146.00 லட்சத்திற்கு கட்ட நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டு வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 435/2021/இ1

தீர்மானம் எண். 79

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.38

பேர்ணாம்பட்டு நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள கிணறுகளின் பைப்புகள் மற்றும் கேபிள்கள் வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளது. பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால், உடனடியாக இப்பணியை செய்ய வேண்டி மதிப்பீடு ரூ.3,75,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு இம்மதிப்பீட்டிற்கு உரிய அனுமதியும் இச்செலவினத்தை 15–வது மத்திய நிதிக்குழு திட்டம் 2020–21ன் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் பணியில் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இவ்செலவினத்தை 15வது மத்திய நிதிக்குழு திட்டம் 2020–21ன் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.704/2021/இ1

தீர்மானம் எண். 80

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.39

பேர்ணாம்பட்டு நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்சார அமைப்புகளில் அடிக்கடி பழுது ஏற்படுவதனால் முறையான குடிநீர் விநியோகிக்க இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது எனவே பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத

வண்ணம் குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் உடனடியாக பழுதடைந்துள்ள மின்சார உதிரி பாகங்களை மாற்றி புதியதாக உதிரி பாகங்களை பொருத்த வேண்டி மதிப்பீடு ரூ. 1,50,000.00–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு இம்மதிப்பீட்டிற்கு உரிய அனுமதியும் இச்செலவினத்தை 15வது மத்திய நிதிக்குழு திட்டம்–2020–21–ன் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. குடிநீர் பணியில் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை 15வது மத்திய நிதிக்குழு திட்டம்–2020–21–ன் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க எண் : 705/2021/இ1.

தீர்மானம் எண். 81

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.40

தமிழகத்திலுள்ள அனைத்து நகர் பகுதிகளுக்கும் 24 மணி நேரமும் வருடம் முழுவதும் தடையற்ற குடிநீர் வினியோகம் செய்ய வேண்டும் என தமிழக அரசு கொள்கை முடிவு செய்துள்ளது. அதனடிப்படையில் பேர்ணாம்பட்டு நகர் பகுதிக்கு 24 மணி நேரமும் தடையற்ற குடிநீர் வினியோகிக்க மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து ஆய்வு செய்து ஆய்வறிக்கை மற்றும் மதிப்பீடுகளுடன் கூடிய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும் மற்றும் புதிய பேருந்து நிலைய கட்டுமானத்திற்கும் ஆலோசகரை நியமனம் செய்யும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. திட்ட பணிகளின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க எண் : 706/2021/இ1.

தீர்மானம் எண். 82

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.41

பேர்ணாம்பட்டு நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் 2017ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரையும் படிவம் எண்.1 (பிறப்பு அறிக்கை) படிவம் எண்.2 (இறப்பு அறிக்கை) போன்றவைகளை புக் பைண்டிங் செய்ய ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.50,000/–(ரூபாய் ஐம்பதாயிரம்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ரூ.50,000/–த்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 115/2022/எச்1

தீர்மானம் எண். 83

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.42

<u>பேர்ணாம்பட்டு முஸ்லீம் கல்வி சங்கம் திரு.பி.அஹ்மத் பாஷா, தாளாளர் அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

பேர்ணாம்பட்டு நகரத்தில் புதிய கட்டிடத்தில் அரசு மருத்துவமனை கட்டி பொது மக்கள் பயன்பாட்டிற்காக தயார் நிலையில் உள்ளது. மேற்படி மருத்துவமனை ஏற்கனவே பேர்ணாம்பட்டு சார்ந்த மறைந்த கொடை வள்ளலும், தொழில் அதிபரும், இஸ்லாமியா மேல்நிலைப் பள்ளியின் நிறுவனர் மற்றும் சமூக அக்கறை கொண்ட ஜனாப் ஹாஜி மரீத் முஹம்மத் இஸ்மாயில் சாஹெப் என்பவரால் உருவாக்கப்பட்டு கடந்த 1962–ம் ஆண்டு அப்போதைய முதல்வர் காமராஜ் அவர்களின் அறிவுரையின்படி, அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்சமயம் புதிய அரசு மருத்துவமனை கட்டப்பட்டு வருவதால், ஜனாப் ஹாஜி மரீத் முஹம்மத் இஸ்மாயில் சாஹெப் அவர்களை கௌரவிக்கும் விதமான ஹாஜி மரீத் முஹம்மத் இஸ்மாயில் சாஹெப் என பெயர் சுட்டுமாறு கல்வி சங்கம் மூலம் கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 84

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.43

<u>பேர்ணாம்பட்டு முத்துவல்லி சவுக் மஜித், திரு.ஹாஜி அப்துல் வகாப் அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

பேர்ணாம்பட்டு நகரத்தில் புதியதாக கட்டியுள்ள அரசு மருத்துவமனைக்கு பேர்ணாம்பட்டு சார்ந்த மறைந்த கொடை வள்ளலும், தொழில் அதிபரும் சமூக சிந்தனையாளர் ஜனாப் மரீத் முஹம்மத் இஸ்மாயில் சாஹெப் என்பவரால் நிலம் வாங்கி அதில் 50 படுக்கையுள்ள ஆஸ்பத்திரி கட்டிடம் கட்டப்பட்டு பெண்களுக்கான இலவச மருத்துவமனையயாக செயல்பட்டு வந்து கடந்த 1962–ம் வருடம் அப்போதைய முதல்வர் காமராஜ் அவர் திறப்பு விழாவுக்கு வந்த போது அவர்களின் யோசனையின்படி அரசு இடம் இலவசமாக ஒப்படைக்கப்பட்டது. தற்சமயம் மேற்படி இடத்தில் புதியதாக அரசு மருத்துவமனைக்கு ஜனாப் ஹாஜி மரீத் முஹம்மத் இஸ்மாயில் சாஹெப் என பெயர் வைக்குமாறு பேர்ணாம்பட்டு நகர அனைத்து பொதுமக்கள் சார்பாக கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண். 85

அனுமதிக்கப்படுகிறது.

(ஒம்./-) வெ.பிரேமா,
நகர்மன்ற தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**

விடுநர்
த.வ.சுபாஷினி, எம்.ஏ.,
நகராட்சி ஆணையாளர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
பேர்ணாம்பட்டு.

பெறுநர்
1. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை–28.

2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம்,
   வேலூர்–12.

<u>ந.க.எண்.89/2022/டி1 நாள் : 05.08.2022</u>

ஐயா/அம்மையீர்,

பொருள் : மன்றப் பொருள் – பேர்ணாம்பட்டு நகராட்சி – சாதாரணக் நகர்மன்ற கூட்டம் 30.06.2022ம் தேதி நடைப்பெற்றது – அறிக்கை அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை : நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் 1608/2022/அ1, நாட்ள.19.07.2022.

*****

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்–12 அவர்கள் கடிதத்தின்படி, இந்நகராட்சியில் நடைப்பெற்ற சாதாரணக் நகர்மன்ற கூட்டம் 30.06.2022 அன்று நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் நடைப்பெற்ற கூட்டப்பொருள்கள் மற்றும் தீர்மானம் அறிக்கையினை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.

இணைப்பு :
மேற்கண்டவாறு